**Date: 12.11.2024**

**MCOP. No. 53/2022**

**RW.1:**

**Name: ஜோஸ்வா டேனியல் ராஜ்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கபடுகிறார்.**

**2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன் என்பதை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தந்தையான 2ம் எதிர் மனுதாரர் சாலைகிராம காவல்நிலையத்தல் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்தார் என்றால்சரிதான். நான் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் எனது தந்தைக்கு சொந்தமான வாகனமாகும். விபத்து நடந்த சாலை இளையான்குடி - பரமக்குடி சாலை தென்வடல் சாலை என்றால்சரிதான். மனுதாரர் வடக்கில் இருந்து தெற்குநோக்கிதான் வந்தார் என்றால் சரிதான். நான் அதிகரை யில் இருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்து ஏற்பட காரணமாக இருந்தேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்த காரணமாக இருந்ததால் தான் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நீருபண வாக்குமுலத்தில் மனுதாரருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாகவும் மனு தாரரின் தந்தைக்கு எந்த காயமும் இல்லை என்றும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் மனுதாரரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக இளையான்குடி காவல்நிலையத்தில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற எண் 302/2021 என்ற வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வழக்கில் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு எனது தந்தை தடுத்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் சிவகங்கை எம்ஆர் எம் டயர் கடையில் வேலை பார்த்தார் என்பது எனக்குதெரியும். அவர் மாதம் ரூ. 10500/- சம்பளம் வாங்கி வந்தார் என்றால் தெரியாது. விபத்து சமயத்தில் எனது தந்தையின் இருசக்கர வாகனத்திற்கு இன்சுரண்ஸ் கிடையாது என்றால் தெரியாது. விபத்து சமயத்தில் எனக்கு இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம்இல்லை என்றால்

சரியல்ல. மனுதாரர் முன்பு போல் எந்தவிதமான கடினமான வேலையும்செய்யமுடியாமல் இருக்கிறார் என்றும் மனுதாரருககு ஏற்பட்ட காயங்களுக்கு ரூ., 500000/- செலுத்துவதற்கு நானும் எனது தந்தையும் கடமைபட்டு்ள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.11.11 15:09:33 +0530

Chief Judicial Magistrate

Sivagangai